உ

சிவமயம்



# குமார காவியம்

## (எளிய நவீன இலகு தமிழ் கவி நடையில் கந்தபுராணம்)

ஆக்கம்:

நீர்வை தி.மயூரகிரி

(பிரம்மஸ்ரீ. தியாக.மயூரகிரிக்குருக்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | குமார காவியம்<br>**KUMARA KAVIYAM** |
| நூலாசிரியர் | : | நீர்வை தி.மயூரகிரி<br>(பிரம்மஸ்ரீ. தியாக.மயூரகிரிக்குருக்கள்)<br>B.A(Cey),Dip.in.Journalism<br>e.mail: mayoorakiri@gmail.com |
| பக்கங்கள் | : | x + 62 |
| தாளின் வகை | : | 70g பேப்பர் |
| வெளியீடு | : | சனாதன சேவா சபா<br>நீர்வேலி. |
| விலை | : | ரூபா 150/= |
| அச்சுப்பதிப்பு | : | ஷாம்பவி பதிப்பகம்,<br>நீர்வேலி, யாழ்ப்பாணம்.<br>021 222 4143<br>077 618 4425 |
| ISBN NO. | : | 978-955-38411-0-0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'தண்டையணி வெண்டையம் கிண்கிணி சதங்கையும்
தண்கழல் சிலம்புடன் கொஞ்சவே – நின்
தந்தையினை முன் பரிந்தின்பவுரி கொண்டுநன்
சந்தொட அணைந்து நின் றன்பு போலக்
கண்டுற கடம்புடன் சந்த மகுடங்களும்
கஞ்சமலர்ச் செங்கையும் சிந்து வேலும்
கண்களும் முகங்களும் சந்திர நிறங்களும்
கண்குளிர என்றன் முன் சந்தியாவோ?'

என்று அருணகிரிப்பெருமான் பாடுகிற அழகன் முருகன். கனவில், நனவில், கருத்தில், எண்ணில், எழுத்தில் இயைந்து தன்னை அறிந்து இன்புற அன்பர்களுக்கு அருளும் ஆடலை ஓதுவது எவ்வாறு?

அவன் உள் நின்று உணர்த்துவதைச் செய்வதன்றி வேறென்ன நாம் செய்ய இயலும்? அந்த முருகனே செய்விக்கிறான். நாம் நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் ஏற்றவாறு உணர்ந்ததை, அறிந்ததை செய்கிறோம்.

அந்த அளவில் மனதில் தோன்றிய உணர்வின் வெளிப்பாடாய், அதையே முருகனின் ஆணையாய் ஏற்று இக்காவியத்தை படைத்திருக்கின்றோம்.

கச்சியப்பர் என்ற வேதியர் குலத்திலகம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் படைத்தளித்த கந்தபுராணம் தமிழ் பெற்ற கொடைகளில் ஒன்று. அதை ஓதி ஓதியே வாழ்வில் நலமும் வளமும் பெற்று பரகதியும் பெற்றோர் எண்ணற்றோர்.

கச்சியப்ப சிவாச்சார்ய சுவாமிகள் கந்தபுராணத்தை எழுத குமரகோட்டத்துக் குழகனே அடியெடுத்துக் கொடுத்தான் என்றும், அவர் எழுதி வைத்ததை இறைவனே இரவில் திருத்திச் செவ்வை பார்த்தான் என்றும் நிறைவில் அரங்கேற்றத்தின் போது 'திகட சக்கர' என்ற சொல்லுக்கு ஏற்பட்ட இலக்கண ஐயத்தை அவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் வந்து அகற்றி அருளினான் என்றும் நிலவும் கதைகள் வாயிலாக சுவாமிகள் அருளிய கந்தபுராணம் இறைவனின் முழுமையான அங்கீகாரத்தை பெற்ற அரிய ஞானப்பொக்கிசம் என்பது உணரப்படுகிறது.

அந்த கந்தபுராணத்தை தங்கள் சொந்தப்புராணமாக போற்றி வாழ்ந்தவர்கள் ஈழநாட்டு மக்கள். ஆதலில் இந்நாட்டு அறிஞர்கள் இப்புராணத்தின் பகுதிகளை பல கோணங்களில் அணுகி விருத்தியுரை, பொழிப்புரை, விசேட உரை, குறிப்புரை, பேருரை என்பவற்றை எழுதி கோயில்களிலும் திருமடங்களிலும் பொது இடங்களிலும் பக்திச் சுவை சொட்டச் சொட்ட படித்துப் பயன் சொல்லிப் பயன்பெற்று வாழ்ந்தார்கள்.

அறத்தின் பால் மக்களை ஈடுபடுத்தும் அளவற்ற சிறப்புடைய கந்தபுராணத்தை படிக்க வேண்டும். படிப்பிக்க வேண்டும் என்பதில் நல்லை நகர் ஆறுமுகநாவலர் பெருமானும் அவர் வழி வந்த சான்றோர்களும் பெரிதும் ஆர்வமுடையவர்களாயிருந்தனர். ஆதனால் அவர் கந்தபுராண வசனம் எழுதியும் பதிப்பித்திருக்கிறார். இந்நூல் பல காலத்திற்குப் பின் இவ்வாண்டு (2017) இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்து சிவயோகசுவாமிகள் முதலிய அருளாளர்களும் நாட்டிலுள்ள துன்பம் தீர கந்தபுராணத்தை படிக்குமாறு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

இத்தகு கந்தபுராணத்திலுள்ள கதைகளுடன் வடமொழி ஸ்காந்தத்திலுள்ள கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாக கொள்ளப்படுகின்ற உபதேசகாண்டம் திருச்செந்தூர்ப்புராணம், பழனித்தலபுராணம், மயூரகிரிப்புராணம், திருத்தணிகைப்புராணம், கதிர்காம மான்மியம் போன்றவற்றிலுள்ள சிற்சில செய்திகளையும் தொகுத்து எளிய நவீன கவி நடையில் ‘குமாரகாவியம்’ என்ற பெயரில் நாம் படைத்துள்ளோம்.

கச்சியப்ப சிவாச்சார்யாரின் கந்தபுராணத்தோடு அடியேனின் குமாரகாவியத்தை இணைத்து நோக்குதல் சூரியனோடு மின்மினியை ஒருங்கு வைத்து நோக்குதல் போன்றதே என்பது மிகவும் தெளிவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், இக்கால சூழ் நிலையை கருத்தில் கொண்டும், உள் நின்று உணர்த்தும் இறைவனின் ஆணையை உளத்தில் கொண்டும் இக்காவியத்தை எளிய- இனிய- புதிய- பாவனையிலுள்ள பேச்சுச்சொற்களையே பயன்படுத்தி பாடல்களாக படைத்திருக்கின்றேன்.

கதிர்காமத்து ஐயனுடைய பெருவிழாவும், நல்லை நகர்க்கந்தரின் திருவிழாவும் நிகழும் காலத்தில், மாவைக்கந்தரின் மஹோத்ஸவம் நிறைவு பெற்றுள்ள சமயத்தில், செல்வச்சந்நதிச் செவ்வேளின் விழா நிகழ உள்ள வேளையில், இந்நூலைப் பதிப்பிக்க திருவருள் தூண்டியது எம் பாக்கியமே ஆகும்.

பிறவிப்பிணியை போக்குவதும் உடற்பிணி, உளப்பிணி நீக்கி வேண்டுவதை அளிப்பதுமான கந்தனின் திருக்கதையை நம் அறிவுக்கேற்ப படைத்திருக்கிறோம். பற்பல குற்றங்கள் இருப்பினும் அறிஞர்கள் குணங்கொண்டு பொறுக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

அன்பும் பண்பும் கொண்ட அடியேனை ஆசி செய்யும் ஆசிரியப்பெருமக்கள், குருமார்களின் ஆசியோடும் நண்பர்களின் ஆலோசனைகளோடும், நம் தந்தையாரின் ஆதரவோடும் நம் அகத்தாளினது அனுசரணையோடும் அன்புமகள் மதுரவர்ஷிணியின் அரவணைப்போடு இந்நூல் பதிப்பிக்கப்படுகின்றது.

ஒரு சஷ்டி நாளில் சிந்தையில் தங்கும் செந்தமிழ்ச் செந்தில் பெருமான் கந்தபுராணத்தை காவியமாய் பாடும் நினைவை எழுப்பினன்! அடுத்த சில நாட்களில் அதிகமானவை எழுதப்பட்டன. ஆயினும் எம் தமிழாற்றலிலுள்ள சிறுமை பற்றி நாம் நன்கு அறிந்திருந்தமையாலும் அதன் வாயிலாக உண்டான அச்சத்தாலும் அது அப்படியே கிடப்பில் போடப்பட்டது. மீண்டும் இந்த ஆடி பிறந்ததும் ஆறுமுகன் பதிப்பிக்கும் எண்ணத்தை நெஞ்சில் உண்டாக்கினன். அவ்வழி இந்நூல் பதிப்பிக்கப்படுகின்றது.

இது வரை யாரும் கந்தனின் கதையை காவியமாய் படைத்ததாக அடியேன் அறியவில்லை. ஆக, இது ஒரு புதிய முயற்சி. இதில் பாராட்டத்தக்க பகுதிகள் உளவேல் அது திருவருள் உதவுதல். மற்றையவை, என் அறிவீனத்தை வெளிப்படுத்தும் காரியம் என்று முருகன் அடியார்கள் கருத வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற் சிறந்த சிறந்த பெரியோர்கள் வடமொழி ஸ்காந்தத்தையோ அன்றி கச்சியப்பப்பெருமானார் அருளிய கந்தபுராணத்தையோ கற்றறிவர்.

ஆயினும் உலகியலில் ஈடுபட்டு வாழும் இக்கால இளைஞரும் சுருக்கமாகச் சொன்னால் மட்டுமே பொறுமையாக கேட்கும் தன்மையுடைய இக்காலச் சிறுவர் சிறுமியரும் புராணபடனம் கேட்கப் பொறுமையிலாதவர்களுமானவர்களுக்கும் கூட கவி நடையில் கந்தன் காதை சேர வேண்டும் என்ற ஆவலுடனேயே இந்நூலை பொருள்புரிந்து கொள்ளும் வகையில்- இலக்கண விதிகளை கருத்தில் கொள்ளாது எளிமைக்கும் புரிதலுக்கும் அதிக முதன்மை தந்து எழுதியுள்ளேன். பிழையேதேனும் உண்டெனினும் சிறியோன் செய்கை எனக் கருதி முருகனடியவர்கள் பொறுத்தருள்வர் என நம்புகிறேன்.

எழுத்தில் ஏதேனும் குறை அல்லது பிழை உளதேல் அறிஞர்கள் தம் இயல்பான கருணையால் அடியேனுக்கு அறிவிப்பர் என்றும் அதை அடுத்த பதிப்பு வெளியாயின் திருத்தலாம் என்றும் நம்புகிறேன்.

இந்நூலை சிறப்பான முறையில் குறுகிய காலத்தில் செம்மையாக பதிப்பித்த எம் அன்பிற்குரிய பதிப்பகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரியதாகுக.

இந்நூல் கலியுக வரதனான கந்தசுவாமியின் காவியம் என்னும் பெருமை பற்றியும், கச்சியப்ப சிவாச்சார்யாரால் முதல்நூல் படைக்கப்பட அவ்வழி வந்த சிவாச்சார்ய சிறியோனான அடியேன் எழுதிய சிறு முயற்சி என்ற சிவாச்சார்ய சம்பந்தம் பற்றியும் அறிஞர்கள் இந்நூலையும் ஒருவாறு அங்கீகரிப்பர் என்று மன நிம்மதி கொள்கிறேன்.

பல நூறாண்டுகளுக்கு முன் தருமையாதீனத்தை சேர்ந்த சம்பந்த சரணாலய சுவாமிகள் என்பார் கந்தபுராணத்தைச் சுருக்கமாக ஆயிரம் பாடல் எழுதி படிக்காசுப்புலவராலும் பிறராலும் பாராட்டப்பட்டார் என்றறிகிறபோது சைவ தமிழறிஞர்கள் அக்காலத்திலேயே இப்புராணத்தைச் சுருக்கிப் பாடுவதை காலத்தேவை கருதி ஏற்றுப்போற்றியுள்ளனர் எனக் கருதலாம்.

ஏழாண்டுகட்கு முன் இருபத்தோர் அகவையான என்னை தமிழகத்திற்கு அழைத்து கந்தபுராண சொற்பொழிவாற்றச் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாரெவரென நம்மை தனிப்பட்ட முறையிலே அறியாமலேயே நம் எழுத்தை படித்து சிறியவனான என்னை ஏணியாக நின்று ஏற்றி விட்ட சட்டத்தரணி காஞ்சி காமகோடீ சங்கராச்சார்ய பீட ரத்னா ந. உமாசங்கர்ஜீ (சென்னை) அவர்களை இந்நேரத்தில் நன்றியோடு நினைந்து போற்றுகிறேன்.

இந்நூலை எழுதியதும் இணைய வாயிலாக என் தவறுகளை களைந்து தக்க வகையில் திருத்தம் செய்து தாய் போல அணைக்கும் தகைமை மிக்கவர்களான தமிழறிஞர்கள் சிலருக்கு நூலின் மென்பிரதியை அனுப்பிவைத்தேன்.

தமிழகத்தையும் ஈழத்தையும் சேர்ந்த அப்பெரியவர்கள் பலரும் சில ஆலோசனைகளோடு மிகவும் பாராட்டி ஆசி செய்தமை என்னை மகிழ்வித்தது.

"உங்கள் எழுத்துக்கள் காலத்தைக் கடந்து மானுடத்துக்குப் பயனுறுத்துமாறு அமைவதாக. குமாரகாவியமும் வரலாற்றில் புகழ்பெற்ற நூலாகி மக்களுக்குப் பயனுறுத்துவதாக" என வாழ்த்திச் செய்தி அனுப்பினார் அருள்நூல் ஆர்வலர் புகழ்பெற்ற நூற்பதிப்பாளர் திரு. மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர்கள்.

தமிழகத்தின் பெரும் இந்துத்துவரும் எழுத்தாளருமான திரு. ஜடாயு அவர்களும் அவ்வாறே மகிழ்ந்து வாழ்த்தனுப்பினார்கள்.

காஷ்மீரத்தில் வசிக்கும் சமஸ்கிருத அறிஞரான திருப்புகழ் ஆர்வலர் திரு. கிருஷ்ணகுமார் ஷர்மா அவர்கள் இந்நூலை இசையோடு கூடி பாடுவதற்கு ஏற்றதாக மாற்றமுயன்று வருவதாக ஒரு செய்தி அனுப்பினார்.

இன்னோர் அன்பர் இந்நூலை பார்க்கிறபோது சிறுவர்களுக்காக வர்ணப்படங்களுடன் கந்தபுராணம் வெளியிடவேண்டும் என்ற ஆவலைத் தோற்றுவிப்பதாக மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

சொற்பொழிவுத் துறையில் தனியிடம் பெற்ற தமிழ் அறிஞர், விரிவுரையாளர் திருமிகு. ச.லலீசன் அவர்கள் நூற்சிறப்புப் பாயிரமாக வெண்பாக்களை அனுப்பி உவகை சேர்த்தார்கள்.

இப்பெருமக்கள் யாவருக்கும் நன்றி தெரிவித்து மகிழ்கிறேன். வரத குமரன் திருவருளால் வாழ்க இப்பெருமக்கள் என்று வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை அழகாக பதிப்பித்த ஷாம்பவி பதிப்பக அதிபர் திரு. சீ. புவீந்திரன் அவர்கட்கும் பொருத்தமான படங்களை சேர்த்து சீராக தட்டச்சு செய்த பதிப்பக பணியாளருக்கும் இறைவன் அருளால் எந்நலனும் நேர்க என இறைஞ்சுகிறேன்.

காலத்திற்கு ஏற்ற வகையில் "கந்தன் கருணை" திரைப்படம் போல தொடர்நாடகமாகவும் திரைப்படங்களாகவும் சிறுவர்கள் உணரும் வகையில் **'பால்கணேஷ்'** **'லிற்றில் கிருஷ்ணா'** போன்ற காட்டூன்களாகவும் வண்ணக் கதைகளாகவும் கந்தனின் கதை பகிரப்பட்டு பிரபலம் பெற வேண்டும் என்பதும் எமது அவா என்பதை இத்தருணத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இத்தகு திருப்பணியாம் - முருகன் அருட்பணி என்றும் அடியேற்கு இருக்க அன்பர்கள் ஆசி செய்ய வேண்டி அவர்களின் திருமலரடிகளைப் பணிந்து இந்நூலை நம் வழிபடு தெய்வமான நீர்வை செல்லக்கதிர்காமச் செவ்வேள் சரணபங்கஜங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

*வற்றாவருள் சேர்குமரேசன்வண் காதைதன்னைச்*
*சொற்றாரும் மாராய்ந்திடுவாருமந் துகளூறாமே*
*கற்றாரும் கற்பான் முயல்வாருங் கசிந்து கேட்க*
*லுற்றாரும் வீடுநெறிப் பாலினுறு வரன்றே*

*இந்திர ராகிப்பார்மே லின்பமுற்றினிது மேவிச்*
*சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வர்*
*அந்தமிலவுணர் தங்களடல் கெட முனிந்த செவ் வேற்*
*கந்தவேள் புராணந்தன்னைக் காதலித்தோதுவோரே*

***இங்ஙனம்,***

***அன்பர்கள் ஆதரவை விழையும்,***

**நீர்வை. தி.மயூரகிரி**

**[பிரம்மஸ்ரீ. தியாக.மயூரகிரிக்குருக்கள்]**

**ஹேவிளம்பி- ஆடித்திருவோணப் பௌர்ணமி- சோமவாரம்,**

**07.08.2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்த நினைத்தேன் வணங்குகின்றேன் ஐய!
# (நேரிசை வெண்பா)

செந்தமிழ்த் தெய்வத்தின் சேவடி வீழ்ந்தெழுந்து
நந்திரு நீர்வைமண் நாயகனார் - செந்தமிழில்
கந்த புராணக் கவிதைகள் தந்திட்டார்
சிந்தை மகிழ்கின்றோம் யாம்

முப்பாலும் முக்கனியும் முத்தமிழும் தித்திக்கும்
ஒப்பேதும் இல்லாத மென்தமிழில் - செப்பரிய
கந்தவேள் காதையைக் கற்பதற் கேற்றதாய்
தந்தநற் பேற்றிற்கு வாழ்த்து

தண்டா யுதங்கொண்ட செல்லக் கதிரோனைக்
கொண்டால் அகங்காரந் துண்டாகும் - விண்டுரைப்பேன்
எங்கள் குருக்கள் இயற்றினாரா இல்லைக்காண்
துங்கமுயர் கந்தனே தான்

வாழ்த்த நினைத்தேன் வணங்குகின் றேன்ஐய
ஆழ்ந்தநன் னூலறிவு கொண்டீர் – வாழ்வுயர
அற்புதமாய்க் காவியத்தை ஆக்கினீர் எந்நாளுங்
கற்பகக் காவாமிந் நூல்

**செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்**
(பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை
பொதுச் செயலர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ குமாரஜெயம்

# குமார காவியம்

## காப்பு

திருமேவு மணி மார்பத்தவனுமாகி
செங்கமலத்தயனும் தானேயாகி
பெருமை மிகு பரசிவப்பொருளுமாகி
பேராளன் பிறப்பில்லாதானுமாகி
பொருசூர் பிளந்த வேலோனாகி
பரவுமெழில் திகழுமொரு மயிலிலேறி
வருமழகன் காதையை தமிழில் சொல்ல
வாரணனார் அடிகள் வாழ்த்துவோமே.

*திருமேவு மணி மார்பன் - திருமகளாகிய மஹாலக்ஷ்மி உறையும் திருமார்பை உடை திருமாலான ஸ்ரீ மஹாவிஷ்ணு.*

*செங்கமலத்தயன் - செந்தாமரையில் எழுந்தருளியுள்ள சரஸ்வதி நாதனான பிரம்மா.*

*பரசிவம் - பரமனான பார்வதி நாதன் - சிவபெருமான்.*

## கதிர்காமக் கடவுள் துதி



அஞ்சுமுகன் பெற்ற அழகனை
ஆறுதல் அளிக்கும் இறைவனை
மஞ்சு வண்ண மாயன் மருகனை
மாதவர் பணியும் முருகனை
கொஞ்சும் அடியர்க்கு எளியனை
குகனை நீர்வை குமரேசனை
கஞ்சமலர் முகவள்ளி மணாளனை
கதிர்காம வேலனை போற்றுவோமே.

*அஞ்சுமுகன் - ஐந்து திருமுகங்களை உடைய சிவபெருமான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரவாகு தேவர் வணக்கம்

பேர ஆகுவை உடையவன்
பெறு இளையவன் இளவல்
சூர ஆகுலம் தொலைத்தவன்
சூது இல்வாழ்வை அருளுவான்
ஏர வாகுறு மாணிக்க வல்லி
எழிலுற அளித்த செல்வன்
வீரவாகுவாம் வரி சிலைக் குரிசில்
விரை கழல் பரவி வாழ்வாம்.

*பேர ஆகுவை உடையவன் - பெருச்சாளியை வாகனமாக உடையவன்.*

*இளையவன் இளவல் - அவனது தம்பிக்கு தம்பியானவன்.*

*சூர ஆகுலம் தொலைத்து - சூரரது துன்பங்களை நீக்கி.*

*சூது இல் வாழ்வருள்வான் - சூதற்ற நல்ல வாழ்வை தருவான்*

*ஏரவாகுறும் மாணிக்க வல்லி - மிக அழகிய மாணிக்கவல்லி*

*வரிசிலைக்குரிசில் - வில்லேந்திய அரசன்*

## நல்லூர்


முல்லையின் முறுவல் கொள்
மங்கையாளுடன்
கல்லையும் கசியச் செய்
கருணையாளனாய்
நல்லையின் நாதனாய்
நல்லருள் பொழியும்
எல்லையில் அருளுடை
இறையை ஏத்துவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிட்டபுரம்

பூவையர் இருவர் பொலியத் தோன்றியே
பாவையின் பரிமுகம் போக்கி அருளியே
மாவையில் மகிழ்ந்து மாண்புறு அடியர்
தேவைகள் பூர்த்தி செய்தேவை வாழ்த்துவாம்.



## செல்வச் சந்நிதி

பொன்நிதி பொருள்நிதி புகழ்நிதி பக்தி
எந்நிதி வேண்டினும் ஏற்றமாய் அருளும்
சந்நிதி என்னும் சார்பிலாத் தலத்து
மின்நிதிக் குகவேல் மாநிதி போற்றுவாம்.

## கொக்குவில் கோயில்கள்

கொக்கறக் கோவென
கோழிகள் ஏத்த
திக்கெலாம் போற்றிட
தலமாறு கொண்டு
கொக்கூர் கோயில்
குமர கிருபாகரன்
துக்கம் அகற்றிடும்
மலரடி பணிவாம்.



*கொக்கு - மாமரம் - மாமரமாக நின்ற சூரன், அற -அறுத்த, கோ -அரசனே.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழகத்தலத்தாடல்

தீவகம் தென்மராட்சி திறமுயர் வடமராட்சி
பூவகம் பறாளாய் புகழுடை இணுவை உசன்
நாவகம் கைதடி நற்கந்தவனம் சுதுகிரி
தேவகம் கோவையாதி தலமவை சேவிப்போமே.

## நீர்வேலி கோயில்கள்



ஏரகம் கொண்ட பூமி
எழில் கொள் நீரவாடி
சீரகத் தலங்கள் மேவி
தேவியருடனே கூடி
நீரகத் தடியர் போற்ற
நித்திய அருளை தரும்
பேரகப் பெருமான் எம்மான்
பதமலர் பணிவோம் நாமே.

## கச்சியப்ப குரு துதி



சூதமாமுனி புகன்ற காந்தம்
சுருக்கியே செந்தமிழின்
மேதமை மிளிரப் பதினாயிரம்
மேம்படு கவியாய் தரும்
மாதவக் கச்சியப்பன் : குமரன்
மாக்கதை உழைக்க வல்ல
வேதியன் : சரணமலர் நாளும்
விநயமாய் வாழ்த்துவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடியார்கள்

முருகாற்றுப் படை தரு நக்கீரன்
முந்து தமிழ்க் கச்சியப்ப குரு
கருணைச் சந்த அருணைமுனி
காலம் புகழ் குமரகுருதாசன்
திருவருள் வள்ளல் தேவராசன்
தமிழ்ப்பாட்டி சிவயோகராதி
பெருகுமுயர் முருகடியார் தங்கள்
பொன்னடி எம் தலை வைப்பாம்.

## அவையடக்கம்

அத்தனாம் ஆறுமாமுகத்து
அருள் வேலன் காதை
பித்தனேன் பிழைகளோடு
பிதற்றிய போதும் இதை
மெத்தவே குணமே கொண்டு
மேலிடும் பக்தி பூண்டு
உத்தமர் ஏற்பார் என்னும்
உணர்வினால் உரைக்கலானேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி காண்டம்

## திரு அவதாரம்

ஏறு ஏறி வரும் இறைவன்
இமயவன் மகள் உமையை
மாறு இலாத மகிழ்வுடனே
மணந்து ரதி மனமும்
ஆறுதல் கொள மதற்கும்
அரிய உயிர் தந்தே
வீறு கைலை வெற்புற்றான்
விரிசடை ஞான மூர்த்தியே.

*ஏறு - நந்தி*
*மதன் - மன்மதன்*
*ரதி - மன்மதனின் மனைவி*
*வெற்பு - மலை*



தன்னிகர் இல்லா தான
தனி ஞானம் தருவோன்
பொன்னுலக அமரர்கள்
புலம்பு தலை கேட்டருளி
இன்னமுத புதல்வனை
இனியளிப்போம் என்று
சொன்னவோர் செய்தி கேட்டார்
தேவர் களிப்புற்றார்!

*அமரர் - தேவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுலாவு செஞ்சடை
ஆதிப் பிரான் அப்போது
மாறிலாத ஆறுமுகம்
மலர தோன்றியே
வீறு நெற்றி விழிகள்
விரைவில் திறந்து வெம்மை
கூறு அருட்பொறிகள்
குற்றமின்றி விடுத்தான்

*ஆறுலாவும் செஞ்சடை - கங்கையாறு உலவும் சடாமகுடம்.*

சங்கரன் தந்த பொறிகள்
சடுதியில் வன்னி வாயு
தங்கியே கொணர்ந்து
தாங்கிட இயலாராகி
கங்கையில் வைப்ப அக்
கவினாளும் ஆற்றிடாது
பொங்கு சரவணமாம்
பொய்கையில் வைத்ததன்றே.



*வன்னி - நெருப்பு*



சரவணத்திடையே சம்பு
சண்முகக் கடவுளாக
அரவணைத்துயிலும் அரி
அவதார வடிவுபோல
ஒரு வடிவன்றி ஆறு
உன்னத குழந்தையாக
திருவடிவம் கொள்ள
தேவர்களதனை கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிடை தீபம் போல
விளங்குமீன் மாதர்கள்
எண்ணரும் உவகையோடு
இசைவுற பாலளித்து
மண்ணில் சரவணத்திடை
மலர்முக முருகவேளை
தண்ணென அணைத்து
தயவுடன் வளர்த்தனரே.



மாளிகைச் செல்வம் தோற்கும்
மாணிக்கத் தொட்டில் தோற்கும்
தூளி இல்லாத போதும்
தூங்குவர் குழந்தையர் அறுவர்
வாழிய! என்பார் தேவர்
வணங்குவர் முனிவர் என்றும்
தாழாத அறமே போல்வர்
தமிழ் போல வளர்ந்தனரே.



பார்வதி பாதச் சலங்கை
பரவு இரத்தின பெண்டிர்
சீர்மை சேர் ஒன்பது
செழும் வீரர் தந்தனரே
பேர்மிகு வீரவாகு கேசரி
பெரியமகேந்திரன் மகேசன்
தேர்வுறு வீரதீரன் வரை
திகழ் நவவீரர் அவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவவீரர்


- மாணிக்கவல்லியிடம் வீரவாகு
- முத்துவல்லியிடம் வீரகேசரி
- புஷ்பராக வல்லியிடம் வீரமஹேந்திரர்
- வைடூரிய வல்லியிடம் வீரபுரந்தரர்
- வைரவல்லியிடம் வீரராக்ஷசர்
- மரகதவல்லியிடம் வீரமார்த்தாண்டர்
- பவளவல்லியிடம் வீராந்தகர்
- நீலவல்லியிடம் வீரதீரர்
- கோமேதகவல்லியிடம் வீரமஹேஸ்வரர் பிறந்தார்.



அம்மையும் அப்பனுமாக
    அரிய சரவணமெய்தி
செம்மைசேர் மகவெல்லாம்
    சிறப்புற அணைத்திடவே
வம்பிலா பேரழகு உருவாய்
    வருமொரு முருகை மகிழ்வுற
நம்மையே காக்கு கந்தவென
    நாடி முத்தம் சொரிந்தார்.

கந்தன் என்பதன் பொருள் சேர்க்கப்பட்டவன் என்பதாகும்.

ஆதித்தன் எழுந்ததென்ன
    அழகிய முகங்களாறும்
வேதத்தின் விளக்கமென்ன
    விளங்கிடு கரங்களோடும்
பாதத்தில் சிலம்பு கொஞ்ச
    பன்னிரு விழிகள் பொங்க
நாதன் அழகுநின் நாயகன்
    நவிலறும் காட்சி தந்தான்.



ஆதித்தன் - சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளையாடல்



மங்கையர்க்கெல்லாம் மகத்துவம் தந்து
மாமுனி புதல்வர் மீனுரு மாற்றி
திங்களணி தேவன் குமரனவன்
தேவர்க்கு தம் மெய்யுரு காட்டி
மாங்கனி வேண்டியே மா உலகத்தை
மும்முறை சுற்றியே பழநியில்
தங்கிடுதலென பல அற்புத நாடகன்
தரணியிலதை சொல்லுவ தரிதே.

*மங்கையர் - கார்த்திகை மாதர்*
*மாமுனி - பராசர முனி*

பிரணவத் தாரகப் பிரமக் குடிலையெனும்
ஓரெழுத்தின் பொருளை பேசென்று
அரிய திருவடி வணங்காது அஞ்சலி செய்
மலரயனைச் சிறையில் வைத்தே
உருகி மாங்கனி ஒன்றினை நாடியே
உலகை வலம் வந்து ஆண்டியுமானான்
இருளென இடர் செய் ஆட்டினை அடக்கி
இனிய நாரதர்க்கும் கருணையே செய்தான்.



## வெற்றிவேல்

மந்திர தந்திரமேது செய்தாலும்
மாயம் வரமேது பெற்றாலும்
சிந்தியே சிதறி அழித்திடவல்ல
சிறப்புறு வெற்றி வேலினை
எந்தையும் சக்தியும் இணைந்தே
எழில் முருகற்கு அருளி
சுந்தரனவனை தழுவி கொடு
சூரனை அழிக்கச் செப்பினாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரனின் கொடுங்கோல்

வஞ்சகத்தின் முழுவடிவம் வானோர் எல்லாம்
வாடிடச் செய் சூரன் உருமன்றோ
நெஞ்சத்தில் ஈரமிலா அவனும் அவனின்
ஈனராம் பாவி அரக்கரும் சேர்ந்து
நஞ்சதை உடையராய் நடத்தினர் அரசு
நாளெல்லாம் துன்புற்றார் நல்லோர்
அஞ்சிடும் தூயோர் அவலத்தை அகற்ற
அருள் வீர வேலோன் எழுந்தானே.

ஊனுடலம் அழியாத
உயர் வரம் பெற்றதாலே
தானெனும் அகந்தை
தளர்வின்றி உயர்ந்திட
வானுலகு அபகரித்து
வருவேத நெறி நீக்கி
ஈனனாம் சூரன் அவன்
ஈரமிலா ஆட்சி செய்தான்.



*ஊனுடலம் - ஊனாலான உடல்.*

## தாரகன் சமர்


பூதப் படைகள் பொலிவுறச் செல்ல
புண்ணிய உருத்திரப் படைகளோடு
தீதிலா வீரவாகு முதலாய் வரு
திறமுயர் வீரர் குழாமும் சேர
வேதன் மகிழ வாயு தூண்டிடு தேரில்
வேலவன் வரும் வேளை
பாதகத் தாரக அசுரன்
படையது கொண்டு எதிர் மறித்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியென முழங்கினன்
இணையின்றி தாக்கினன்
முடிவில்லா முதல்வனை
முடிக்கவே முனைந்தனன்
கடிதினில் சிவப்படை
கரிமுகத் தாரகன்
திடமுறத் தூண்டினன்
திகைத்து நின்றானே.

*கரிமுகம் - யானை முகம்*



அம்பு போல் பாயும் அந்த
அரன் படை தன்னை கையில்
எம்பிரான் வாங்கி வேலை
எதிரனுப்பினன் வெற்றி வேலும்
உம்பருக்கு ஊறு செய்த
உயர்மலையுடனே சூரன்
தம்பி தாரகனுயிரை உண்டு
தகவுடன் மீண்டதன்றே.

*அரன்படை - சிவப்படை, உம்பர் - தேவர்.*

மாரியிலே மழை பொழிந்து
மக்களினம் வாழ வைக்கும்
காரியம் போல அவலமாம்
காலத்தே வந்து அருளி
ஊரினை அழித்து வாழ்ந்த
உயர் மாயா மலமாமிவன்
சீரது அழித்து காத்த நின்
சேவடி போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றென்று பலவாறாய்
ஏத்தினர் தேவர்கள்
குன்றொடு யானைமுக
கொடியோனை அழித்த
வன்றமிழ் பெருமானை
வரமருளும் பெரியோனை
நன்று பணிந்திட்டாலே
நாளும் நலம் பெறலாமே.

*குன்று - கிரௌஞ்சமாலை*

தாரகனை கொன்ற பின்
தரணியிலே விளங்கும்
சீருடைய சிவாலயங்கள்
சிறப்புறத் தரிசித்தே
பேருடைய அலைகள் தழுவு
பெருமைக் கந்தமாதன
சீரலைவாய் சேர்ந்தான்
சிவசண்முகத்தையனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுர காண்டம்

## அசுரர் பிறந்த கதை

மன்னிடு காசிபன் மாதவத்தாலே
மாபலம் பெற்று உயருதல் கண்டு
கன்னியாம் மாயை என்னுமரக்கி
காமத்தால் அவனை தன்வயமாக்கி
வன்மை மிகு சூரன் சிங்கனுடன்
வரம்மிகு தாரகன் அசமுகியாதி
எண்ணரும் அரக்கரை ஈன்றாள்
ஏக்கமுற்றஞ்சினர் இமையோரே.

சீலம் நிறைந்த காசிபன் தனது
சிறுமையால் விளைந்த புதல்வரை கண்டு
ஆலம் உண்டு அமரரை காத்த
ஆண்டவன் பெருமை மிகவும் சொல்லி
காலன் பிடியினின்று மார்க்கண்டன்
கடவுள் கருணையில் தப்பிய காதை
ஞாலமறிய உரைத்து தவத்தில்
நாளும் ஈடுபட உபதேசித்தான்.



மாயவள் அவற்றை மறுதலித்திட்டு
மாதவச் சுக்கிரன் சொற்படி
தீயதில் நின்று தவமது செய்து
திறமுற படைகள் அரசு பெறுகென
பேயதாய் புகன்றனள்! புதல்வர்
பெருமையிது என்றெண்ணி
ஆயிரமாயிரமாண்டுகள் தவம்
அரனை நோக்கி இயற்றினாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொடிய ஆட்சி

எண்ணிலா வரங்களோடு
ஏற்றமாம் இறவா வரமும்
விண்ணவர் வாடியோட
விரைவினில் பெற்ற சூரன்
மண்ணினில் மகேந்திரபுரி
மாநகரில் அரசனாகி
கண்ணெதிர் படுவனவெல்லாம்
கவர்கின்ற கள்வனானான்.

அதிரவே ஆர்ப்பரித்தான்
அமரரை ஏவல் கொண்டான்
விதி தரு பிரம்மனாதி
விண்ணவர் உலகமெல்லாம்
அதிபதி தானேயானான்
அரிய பதும கோமளையோடு
நிதிபதியாய அவன் பல
நிகரில் பெண்டிரை மணந்தான்.

அஞ்சிய அண்டர் கோனும்
அவனியில் சீர்காழியிலே
கஞ்ச மலர்ப் பொய்கை சூழ
கவின்மிகு சோலையதனில்
வஞ்சியோடு ஒழித்து வாழ்ந்து
வேதனைகள் தீர
தஞ்சமென சிவார்ச்சனை
தகவுடனே செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி மலை வேந்தனார்க்கு
வேதனை தன்னைச் சொல்ல
கள்ளமில் உள்ளம் பூண்டு
கைலையை இந்திரன் நாட
துள்ளுமா எழிலைக் கொண்ட
தூயளாம் இந்திரன் தேவி
வெள்ள மாக்கண்ணீரோடு
வாடியே காழியிலிருந்தாள்.

*காழி - சீர்காழி*

நிலவெனும் வதனம் கொண்ட
நிர்மல இந்திராணி மீது
அளவிலா காமம் கொண்ட
அந்தகன் சூரனவளை
களவாட எண்ணி அசமுகி
காரிகையாளை தூண்ட
எழும் பெரும் படை சேர
ஏகினாள் ஏற்றமில்லாள்.



வடிவில் உயர் இந்திராணி
வனத்தில் தனித்திருக்கவே
முடிவிலா முதல்வன் ஐயன்
மூப்பிலா மணிகண்டன்
அடிபரவும் வீரமாகாளன்
அன்புடன் காவல் செய்தே
கடிதென வரு அசமுகி
கைகளை அறுத்தெறிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரிஹர சுதன் (ஐயப்பன்)



சரண கோஷம் கேட்டாலே
சடுதியில் வரும் தேவன்
அரியுடன் அரன் சேரவே
அருளொடு வந்த மூர்த்தி
பரிமீதும் வருவான் அடியர்க்கு
பாதுகாப்பை அருள்வான்
உரிய சபரீசன் உயர் பாதம்
உம்பர் மிகப் போற்றினரே.

*பரி - குதிரை*

## வில்லவன் – வாதாபி

திடமுறு அசமுகி பெற்ற
திருடர் வில்லவன் வாதாவி
கடிதினில் நரமாமிசத்தை
கடித்துண்ணும் கொடியரிவர்
குடமுனி தன்னை தின்ன
குறித்தனர் ஒரு நாள் ஈசன்
விடமது உண்டால் போலமுனி
விழுங்கினார் அவரையன்றோ.

*குடமுனி - அகத்தியர்*



## காவிரி பெருகிற்று

கும்ப மா முனிவன் கெண்டியில்
கோதறு காவிரி வரவே
நம்பிரான் காக்கையாகியதை
நாடியே கவிழ்க்க ஆறு
செம்மையாய் பெருகிற்றம்மா
செழித்தது பூமியெல்லாம்
உம்பரும் பிள்ளையார்க்கு
உயர் தோப்புக்கரணமிட்டார்

*கும்பமாமுனி - அகத்திய முனிவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரன் செயல்

எட்டிசையும் நடக்கும் ஆட்சி
ஏற்றமுறு விமானம் கப்பல்
தொட்டதுமே செய்தி சொல்லும்
தொலை பேசி தொலைக்காட்சி
அட்டகாசக் கொண்டாட்டம்
அசுரர்க்கு அமைந்த போதும்
விட்டனர் தருமம்: இறை
விருப்பினுக்கு மாறே செய்தார்.

தொட்டிலில் கிடந்த போதே
தூய சூரிய வெப்பம் தன்னை
சுட்டது என்றே சொல்லி
சிறையிட்டான் பானுகோபன்
கட்டிலில் காரிகையர் பலர்:
கனவிலும் கொடுஞ்செயல்கள்
முட்டமது உண்டு மிகவும்
மூர்க்கனாய் திரிந்தானே.

*பானுகோபன் - சூரனின் மகன்*

என்றனன் வியாழன்: தன்
எழுமூச்சில் கனலே சிந்தி
நன்று நீ சொன்ன சேதி
நாளையே யாவும் மாறும்
வன்றிடு வேலினாலே அசுரர்
வலிதனை தொலைப்போம்
குன்றெனும் குணக்குருவே பயம்
கொள்ளற்க என்றான் குமரன்

*வியாழன் - தேவகுருவான பிரஹஸ்பதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேந்திர காண்டம்
## தூதுவன் சென்றான்

நாட்டிய புகழ் சூர் முன் போய்
நல்லவர் சிறையை நீக்கி
வாட்டமில் அறத்தில் வாழவே
வலியுறுத்தி அவன் மறுக்கில்
கூட்டமாய் அழிப்பம் என்னும்
குமரனார் செய்தி சொல்ல
தீட்டிய வீரவாகுவாம் திறலோன்
திருவிழு மகேந்திரம் போனான்.

கால் கொண்ட விசை கொண்ட
கழல் கொண்ட வீரவாகு
பால் கொண்ட நிறம் கொண்ட
பெருங் கடலின் நடுவில்
வேல் கொண்ட இறைவன்
விடு தூதனாய் விரைந்து
கோல் கொண்ட சூரபத்மன்
கொடு மகேந்திரம் கண்டான்

தூதனை கண்ட அரக்கர்
தொல்லை மிக கொடுத்தார்
பாதகர் அவரை பலியிட்டு
பறந்தே சூரபதுமனுறை
தீதுடைச் சபையில் வந்து
தகவுறு ஆசனத்திருந்து
நீதியை நிறைய சொன்னார்
நியமமே பேசலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதியான பராபரன்
ஆறுமுகம் கொண்டுற்றான்
தீதிலாத அவனடி
திருந்திச் சேர்தலே முறை
நீதியிலாத நெறியில் நீ
நிறைய பாவமே செய்தாய்
வேத நெறிக்கு மீளுவாய்
வேந்தர் வேந்தனாய் வாழுவாய்.

தீயவன் பண்ணை நின்று
திறமுற முருகன் சேதி
தூயனார் சொல்லக் கேட்டு
துடித்தனன் எழுந்தனன்
ஆயிரம் பேரைத் தூண்டி
அழித்திடுக என்ன அவர்
மாய்ந்திட தாக்கி வீரன்
மறுகணம் மறைந்திட்டானே.

வீறான தாருகனை வெற்புடன் தடிந்து
விரி கடல் செந்தில் விளங்கிடு தேவன்
மாறாத மலரடிகள் வீரன் வந்தணைய
மாய மாச் சூரன் தன் படை சூழ
ஆறாக வருமசுர அறிஞர்கள் கூட
அரிதான ஆலோசனை செய்து
கூறாக்குவேன் குகன் குழுமத்தை என்று
கொதித்திட்டான்: சிங்கன் எழுந்திட்டானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுமுணர் மனச் சிங்க முகன்
முழுதும் நீதிகள் சொல்லி
குற்றமிவை களைக என்ன
கொதித்தனன் சூரபதுமன்
சிற்றறிவுடையேன் நாயேன்
சினம் நீக்கு என்றான் சிங்கன்
உற்ற உண்மைகள் தீயோர்க்கு
உணர்வித்தல் இயலாதன்றே.

# யுத்த காண்டம்

## கதிர்காமத்து ஐயன்

ஏழையேன் தனக்கும் இரங்கி
என்றுமே கருணை செய்யும்
தாழ்விலா தமிழின் தெய்வம்
தரங்கத்தை கடந்து தன்னை
சூழுநற் படைகளோடு உயர்
சுகந்தரும் கதிர்காமத்தில்
ஏழுலகும் வாழ ஏமகூடத்து
எழிலுறும் கோயில் கொண்டான்.

## வீரவாகு திறன்

அனுமனே போலும் ஆற்றல்
அறிவொடு ஆண்மை வீரம்
மனுநீதி கண்ட சோழன்
மனம் போல தர்மநாட்டம்
தனுவுடை விசயன் போலும்
தகவு நல்லழகு ஆட்சி
முனிவனே போலும் ஞானம்
முழுவதுமுடைய செல்வன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுக்கு விஜயன் போல்வான்
வியன் வாளில் வீரபத்திரனாம்
மல்லுக்கு வீமன் போல்வான்
மன உறுதியில் தருமனாவான்
சொல்லுக்கு அரிச்சந்திரனிவன்
சகம் புகழ் இலக்குவன் போலே
வல்ல எம் வேலவனாரின்
வழி வரும் வீரவாகு தேவன்.




இத்தகு பெருமை மிக்க
இணையிலா வீரவாகு
அத்தன் ஆறுமாமுகன்
அடியிணை பரவிச் சூர்
புத்திரன் பானுகோபன்
போருக்கு வருதல் சொல்லி
வித்தகச் சமரை வேண்ட
விரும்பியே முருகன் தந்தான்.

## பானுகோபன் முதல்நாள் யுத்தம்

பட்டது வெப்பம் என்று
பரிதியை பிடித்து சிறை
இட்டவன் பானுகோபன் இன்று
எழுந்தனன் போருக்காக
கொட்டிற்று போர் முரசு
கூத்தாடிற்று அசுரர் குழு
மட்டிலா வீரர் வெள்ளம்
மாச்சமுத்திரமானதம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கது முழக்கம் செய்ய
சடுதியில் பேரிகை பேச
வங்கமே வந்தாற் போல
வீரச் சுனாமி வந்து சேர
துங்கமது முதலாம் படை
தூளி விண்ணை முட்ட
பங்கமுறு பானுகோபன் சீறி
சென்றன் தேரின் மீது.

*துங்கப்படை - யானைப் படை (கஜசேனை)*
*இது முதலான - கஜரத துரக பதாதிகளான சதுரங்க சேனைகள்.*

படைகள் அழிந்தன: படர்ந்தது குருதி:
பேய்கள் ஆடின: பாடின எங்கும்
தடையில் போரில் தனித்த பானுகோபன்
தளர்ந்து மாயையில் ஓடி மறைந்தான்
உடைவாள் தாங்கிய உயர் வீரவாகு
உன்னத வெற்றி கண்டனர் அன்று
கடையவன் பானுகோபன் தோற்க
களித்தனர் தேவர் கூத்திட்டாரே.

தோற்றனன் பானுகோபன் தூதுவனிடத்திலென்று
காற்றினில் வந்த சேதி காவலன் கேட்டு
சுற்றமும் சூழ அந்த சுந்தர குமரனை நாளை
கூற்றுக்கு கொடுப்பன் நான் எனக் குமுறினானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் நாள் சூரபத்மன் போர்

உற்ற தூதனும் அமைச்சும் ஆகுவான்
உயர் வீரவாகுவொடு படை சூழ
வெற்றி வேலுடை இறைவன் வாயு
விடுக்கும் மனோவேக ரதமேறி
குற்றமே புரி சூரபதுமன் குழாம் நிறை
களமதில் நண்ண: அங்கே
பற்றிய தீ போல பரவிற்று போர்
பூதர்கள் பலரும் தோற்ற மடிந்தார்.

*பூதர்கள் - முருகப்பெருமானின் படைவீரர்கள்*
*அவர்கள் சூரபத்மனின் போரில் அவனை எதிர்க்க இயலாது மடிந்தார்கள்.*

விழுந்தனன் வீரவாகு
விரி கடற் பூதரெல்லாம்
அழுந்தினர் பூமி மீது
ஆர் எதிர் நிற்கவல்லார்
எழுந்தனன் சூரன்
எங்குற்றான் பாலனென்று:
பழுதிலா நகை பரவ
பகவான் சூர் முன் வந்தான்.

ஆழி எடுத்து அறுமுகன் விடுத்தனன்
அங்கு நின்ற அசுரரெல்லாம்
ஊழி காலத்து உலகம் போலவே
ஒரு கணத்தினில் அழிந்தனர்
சீலமாய சிவப்படையதை சூர் விடவே
சிறந்து நின்ற சிவகுமாரன்
வேலன் கையில் அதை பற்றினன்
விரைந்து மாயமானான் அசுரனே.

*ஆழி - சக்கராயுதம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடினன் சூரபத்மன் என்னும்
ஒரு பெரும் சேதி கேட்டு
ஆடினர் அமரரெல்லாம்
அயர்ந்தவர் மீண்டெழுந்தார்
வாடிய நிலத்தின் மீது
வரு மழை செழிப்பையூட்டும்
வீடிழந்த வானோர்க்கும்
வியன் மகிழ்ச்சியுண்டானதே.



## மூன்றாம் நாள் பானுகோபன்

மூன்றாம் நாள் பானுகோபன்
முடிவிலா மாயம் செய்தான்
வான் நின்ற தேவரெல்லாம்
வருந்தியே மயக்கமுற்றார்
கோன் தரு குமரன் கைவேலால்
களைந்தது மாயமெல்லாம்
ஊன் உயிர் மீளப் பெற்று
உயர்ந்து வேலைப் போற்றினாரே.

## தொடர்ந்தது போர்

வன்னி சேர் மாமுகன் பட்டனர்
வந்த இரணியன் தோற்றோடினன்
துன்ன வந்த மூவாயிரர் உயிர்
துறந்து வாழ்வை விடுத்தனர்
இன்ன பான்மையில் அங்கு வந்த
தரும கோபனும் இறந்தனன்
மின்னு முடிச்சூர் மக்கள் பலர்
மடிந்தனர் பயந்தோடினர்

*வன்னி - அக்கினி, வன்னிசேர் மாமுகன் - அக்கினி முகன்*
*இரணியன் - சூரன் மகனான இரணியன்*
*மூவாயிரர் - மூன்று ஆயிரம் சூரனது பிள்ளைகள்*
*தருமகோபன் - சூரனின் தலைமை அமைச்சன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் நாள் பானுகோபன் போர்

ஓடிய பானுகோபன்
உரம் கொண்டு வந்தான்
தேடிய தேவரை யான்
தின்றின்று முடிப்பனென்றான்
சாடியே சரங்கள் பெய்து
சவமதை குவியச் செய்தான்
கேடிலா வீரவாகு எதிர்
கொள்ள முன்னே வந்தான்

*சரம் - அம்பு (சரங்கள் - அம்புகள்)*



கதிரவன் படை மலரவன் படை
கண்ணனின் படை வளிப்படை
அதிரும் தீப்படை மாயமாப் படை
அவலம் நீக்கும் ஞானப்படை
முதிரு நந்திப்படை முழங்கு யமப்படை
மேன்மை சிவப்படை கருடப்படை
விதியின் வருணப்படை என விரி படை
விடுத்தே இருவரும் பொருதார்.

*கதிரவன் படை - ஆதித்யாஸ்திரம்*

*மலரவன் படை - பிரம்மாஸ்திரம்*

*கண்ணனின் படை - நாராயணாஸ்திரம்*

*வளிப்படை - வாயுப்படை*

*தீப்படை - அக்னியாஸ்திரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டரை சிறையிலிட்ட
ஆடவன் பானுகோபன்
வண்டிரு கரங்களோடு
வியன் தலையும் வெட்டி
கண்டவர் வியக்க வெற்றி
கொண்டனன் வீரவாகு
தண்டையணி பாத மூர்த்தி
சரணமே பேணினானே.



*அண்டர் - தேவர்*

## சிங்கமுகன் போர்

வீறு கொண்ட போரிலே
வீர சூரன் தம்பியாம்
ஏறு சிங்க மாமுகன் விரைவில்
எழுந்து போர்க்கு வந்தனன்
ஆறாம் நாளின் அப்போரிலே
அருமை வீரவாகு முன்வர
ஈறு செய்வன் உம்மையென
இறுமினான் சிங்கர் சிங்கனே.

அம்பு படினும் அவலமே அடையான்
அண்டியே அமரரை தின்பான்
சம்பு தந்த வரமுடை அவனின்
சிரம் கரம் வெட்டினும் வளரும்
வம்பு மிக்க சிங்கனின் வன்மையில்
வாடியே வீரர்கள் வீழ்ந்தார்
நம்பிரான் தனி ஒருவனாய் தேரில்
நடத்தினார் பெரும் போரதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதர்கள் அழிந்து போக
பொய்யிலா வீரவாகு
நாதனும் நலிந்து வீழ
நற்றிரு முருகனே
தீதுடை சிங்கன் முன்பு
திருவுருக் காட்டி நின்று
பேதமில் போரை செய்தான்
பெருமை சிங்கனதே.



தாக்குதல் தொடர்ந்திடவே
தளர்வின்றி வளரும் சிங்கன்
ஆக்கையின் வலிமை கண்டு
ஆறுமாமுகனும் தன்திரு
வாக்கினால் தடுத்த பின்னர்
வச்சிராயுதத்தை ஏவி
மூக்கிலாதிருந்த சிங்கன்
முழுக்கதை முடித்திட்டானே.

*ஆக்கை - உடம்பு*

*வச்சிராயுதம் - முருகனின் கையில் விளங்கும் குலிசம் என்ற சிறப்பான ஆயுதம்.*

## சூரபத்மன் பெரும் போர்

கன்மத்தின் வடிவன் சிங்கன்
கடவுளின் கரத்தில் மேவும்
வன்மிகு வச்சிரத்தினாலே வீழ்ந்து
வரம் மிகு உயிரை விட்ட
தன்மையை அறிந்த போதும்
தளர்வுற்றான் அன்றி சூரன்
பின்னுமே போரை செய்தான்
பெரு வீரன் அவனேயன்றோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிலே நின்றும் மா ரததேறி
விண்ணிலே நின்றும் விரி கடல்
தண்ணீரில் நின்றும் தளர்வின்றி
திண்மையில் சூரன் திறமுற போரிட்டான்.

திக்கெல்லாம் தானே நின்றி
திறமிகு படைகள் தூண்டி
முக்கண்ணன் அருளில் வந்த
முழுமாயம் யாவும் காட்டி
சக்கிரவாகமான பெரிய புள்ளின்
சரதமாம் வடிவும் கொண்டு
அக்கிரமம் மிகு சூர பதுமன்
அமரரை விழுங்க வந்தான்.

*புள் - பறவை*

*சக்கரவாக பக்ஷி- இது புராணங்களில் பேசப்படும் ஒரு வகை பெரிய பறவை. கழுகு இனம் என கருதலாம்.*

கூற்றென வருவான் பின்
கொடும் இருளென வருவான்
காற்றென வருவான் அங்கே
கனலென எரித்து நிற்பான்
மாற்றிலா மறவர் போன்றும்
மறுவுரு எடுத்து எதிர்ப்பான்
தேற்றிலா விடமே போல்வான்
திருடனாய் சூரபதுமன்

*கூற்று - யமன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருடனவன் செய்த மாயத்
தன்மைகள் நீக்கி பின்னும்
அருளொடு நோக்கி அந்த
அரசனின் தவமே நோக்கி
கருணையோடு தானே எங்கும்
கலந்துறை கடவுள் என்னும்
ஒரு பெருவுருவம் காட்ட சூரன்
உணர்ந்ததை அனுபவித்தான்.

## விஸ்வரூப தரிசனம்

அண்ட கோடிகள் எல்லாம்
ஐயனின் மேனி தன்னில்
கொண்ட ஓர் உரோமத்தில்
கோத்த நல் மணிகள் ஆகும்
பண்டொரு நாளில் சிவன்
கொண்ட பெருஞ்சோதியாக
விண்ணது கழலில் நிற்கும்
விசுவரூபம் அதனை கண்டான்



சராசரம் அனைத்துமாகி
சராசரமெல்லாம் தன்னுள்
பராபர இயற்கையாகி
பற்பல சிரங்கள் அய்யோ
விராவிய விஸ்வரூபம்
விரிப்பதற்கு வார்த்தையில்லை
மராமலர் சூடும் நாதன்
மாபெரும் வடிவு கொண்டான்

*மராமலர் - கடம்ப மலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சில கணம் திகைத்த சூரன்
சிறுவன் மயக்கினானே என்று
நலமறு நெஞ்சத்தோடு கடல்
நடுவில் மாமரமாய் நிற்க
வலமதில் விளங்கும் வெற்றி
வாகையே சூடும் வேலால்
உலக ஈசனாம் முருகனவனை
ஓரிரு கூறிட்டானே.

## வெற்றி

எழுந்தனன் சூரன் பின்னும்
எதிர் நின்று போர் செய்தான்
பழுதிலா பெருவேல் மார்பு
பிளந்தே கங்கை மூழ்கி
வழுவிலா வடிவம் கொண்டு
வண் முருகு கரத்தில் சேர
தளர்விலான் பின்பும் மயில்
தகவுறு சேவலாய் வந்தான்.

மஞ்ஞையை வாகனமாக்கி
மா ஒலி செய்யும் குக்குடம்
தஞ்சமென அடைய செய்து
தகவுடை கொடியதாக்கி
அஞ்சலென அருளை செய்து
அமரர் கொடு சிறையை நீக்கி
கஞ்சமலர் கடவுள் என்றும்
கருணையே புரிந்திட்டாரே.




*மஞ்ஞை - மயில்*
*குக்குடம் - சேவல்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திப் பிரணவ மாமயிலில்
மூவுலகும் வலம் வந்தோன்
இந்திரனாம் மயிலேறி
ஈடில்லா போர் செய்தோன்
வந்தெதிர் நின்ற சூரனை
வளர் கருணை நோக்கு
மந்திரத்தால் மாற்றி மயில்
மா வடிவாக்கி இருந்தனனே.



ஒளியை ஈசன் வழங்கி விட்டான்
கொடியர் இங்கு அறியவில்லை!
களவும் பொய்யும் மிக்கவர்கள்
கலக்கும் இருளை விரும்புகிறார்!
அளவில் அழகு ஆறுமுகனை
அறியா திருந்த சூரபத்மன்
உளமே திருந்தும் போதிங்கு
உண்மை மாற்றம் உண்மையே!

தண்ணீரால் கழுவாமல் நீர்
தாமரை பாதம் தன்னை
கண்ணீரால் கழுவினான்:
ககனத்து அரசன் மைந்தன்
எண்ணியே இருந்திலோம்
ஏக்கமே கொண்டு வாழ்ந்தோம்
வண்ண மயிலேறி வந்து
வாழ்வித்தீர்: வணங்குகின்றோம்.



*ககனம் - வானம்,*

*அரசன் - மைந்தன், சயந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனிந்த அழுகை? என்றான்
எழுக அரசு ஏற்க என்றான்
தானென்று அகந்தை கொண்ட
தலைவனை வென்ற வீரன்
வானென்ன நிறமே கொண்ட
வளர் மயில் மீதிலேறி
தானே எழுகதிர் போல
தகவொடு வீற்றிருந்தான்.

காற்றொடு புயலும் போல
குக்குடம் மயிலும் ஆகி
ஆற்றலோடு எதிர் வந்தோன்
ஐயனைப் பணிந்து மிக
மாற்றமே ஆகக் கண்டார்
மாமாயன் இவனே என்றார்
உற்றதாம் உயிரைப் பெற்று
உவகையோடு உயர்ந்திட்டாரே.

## தேவ காண்டம்
## தேவயானை திருமணம்



கும்ப மாமத வாரணம் ஏறி
குன்றுயர் பரங்கிரி மேவும்
எம்பிரான் திருவடி போற்றி
எம்மகளை மணந்தருள்க
நம்மைக் காக்கும் நாயகவென
நல்லோன் நாடி வேண்டிடவே
செம்பொன் மேவு வடிவேலுடை
செவ்வேளதை ஏற்றான்.

*வாரணம் - யானை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரணத்திரு மாமகள் தன்னை
மன்றல் செய்திட வந்தருளும்
நாரணன் திருமருகப் பிரான்
நடை கண்டு ரம்பை முதலாம்
பூரணக் கவின் மாதர் அண்டினர்
பொங்கு பல்லியமெங்கும் முழங்க
தோரணம் நிறை பூமணச் சோலையுள்
திருநாண் தரித்தனன் திருவேலனே.

*வாரணத்திரு மாமகள் - தேவயானை*

*மன்றல் - திருமணம், பூரணக் கவின் மாதர் - ரம்பை, ஊர்வசி முதலிய அழகிய தேவப் பெண்கள், பல்லியம் - பல வகை வாத்தியம், பூமணச் சோலை - திருமண மேடை.*

கற்பில் மேம்படு காரிகையோடு
ககனராசன் சலமதை விட்டு
பொற்பு வேலவன் திருக்கரத்தை
பொங்கும் அன்பினிலே தழுவி
உற்ற மங்கையை நல்கினனென்று
உயர்ந்து மகிழ்ந்தனனங்கு
நற்றவர் நற்காட்சியை கண்டோம்
நம் தவம் மிகப்பெரிதென்றாரே.

மங்கையோடு மாவடிவேலன்
மண வினை கண்டு மகிழ்ந்து
பங்கமில் உலகமுய்யுமாறு
பரசுகமது கண்டு இருந்து
கங்கை சூடிய நாயகனோடு
காமாட்சியாளையும் போற்றி
பொங்கு கந்த பொருப்பு மேவ
புகழ் வீரரும் காவல் செய்திட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்ஷ காண்டம்
## சந்தேகமுற்ற சயந்தன்

மன்னனாம் சயந்தன் தானும்
மாதவ குருவை நாடி
இன்ன நாளளவும் சூரன்
இட்ட சிறையில் தளர்ந்து
மன்னு போக மகிழ்வழிய
மட்டிலா துன்பமே பெற்ற
தன்மையின் காரணம் கேட்க
தகவுறு குரு சொல்வான்.



## தக்கன் வாழ்வு

அன்ன வாகனன் சொன்னது கேட்டு
அரிய புத்திரன் ஆடவன் தக்கன்
முன்னம் அடிமுடி அறிய ஒண்ணாத
மூர்த்தியை நோக்கி தவமதை முயன்று
வன்ன வாழ்வும் வளமும் அரசும்
வடிவுடை உமையை மகளாய் பெறும்
தன்மையாம் பெரு வரங்களைப் பெற்று
தரணியில் மகிழ்ந்து ஆட்சி செய்தான்.

*அன்ன வாகனன் - அன்னத்தை வாகனமாகக் கொண்ட பிரம்ம தேவன்*

*பிரம்மாவின் பத்து புதல்வர்கள் தச பிரஜாபதிகள் எனப்படுவர். அவர்களில் ஒருவனே தக்கன் என்ற தக்ஷ பிரஜாபதி. அவன் பிரம்மாவின் ஆலோசனைப் படி அடி முடி தேடி காணமுடியாத சோதி வடிவம் பெற்ற அருணாசலேஸ்வரரை நோக்கி தவமிருந்து அரசும் வளமும் உமையம்மையை மகளாகப் பெறும் பேறும் பெற்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசு இல் மாசித் திங்கள்
அமைவுறு மக நன்னாள்
மாசு இல் மகவு கண்டு
மகிழ்ந்தனன் தக்கன் என்றும்
தேசுடை அப்பெண்ணே
தேவி என சிந்தை கொண்டு
வீசு புகழ் தாட்சாயணியென
விளங்கு திருநாமம் தந்தான்.

சுந்தரி வளர்ந்த பின்னர்
சுவாமியை அடைய வேண்டி
விந்தை கொள் தவத்தை
விரும்பியே இயற்றும் போது
அந்தண வடிவு கொண்டு
அரனவன் அங்கு சேர்ந்து
பந்தமுற கைப்பிடித்தான்
பெருவிழா தொடங்கியதே.



மன்றல் நடந்த போது
மாசிவன் மனைவியோடு
வன்றிரு விடையில் ஏறி
விரைவினில் மறைந்தருள
குன்றிடும் அறிவு கொள்ளும்
குற்றமாம் தக்கன் தன்னை
இன்றிவன் இகழ்ந்தானென்று
இணையிலா கோபமுற்றான்.

*மன்றல் - திருமணம்*

*விடை - நந்தி வாகனம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்கன் வேள்வி

ஆறு கொண்ட சிர அண்ணலை
அழைத்திடாமல் வேள்வியை
வீறு கொண்ட தக்கன் பின்
விரைந்து செய்ய விரும்பியே
பேறு பெற்ற தேவரை பெரிய
பிரமாதியரை அழைத்தனன்
சீறுகின்ற தக்கன் செய்யும்
சிறுமையில் அவர் சேர்ந்தனர்.

*கங்கையாற்றை தலையில் சூடிய சிவபெருமானை அழையாது கோபத்தின் காரணமாக தக்கன் செய்யும் சிறுமையான காரியத்தில் பிரம்மாதி தேவர்கள் யாவரும் கலந்து கொண்டனர்.*

இந்திராதி தேவர்கள்
இணைந்து அங்கு குழுமவே
சிந்தையில் சினமே பூண்டு
சிறுதொழில் தக்கன் செய்யும்
மந்திர வேள்வி தன்னில்
மகேசனை இகழ கேட்டு
நந்தியார் நடுக்கமுற்று
நலிவுறச் சாபமிட்டார்.



*சிவபெருமானை அழையாது செய்யப்பட்ட அந்த மஹாயாகத்திலே சிவநிந்தனை, சிவதூக்ஷணம் தாராளமாக நடந்தது. அதை அங்கு வந்த நந்தியெம்பெருமான் கேட்டு நலிவுறுமாறு சாபம் இட்டார்.*

*இந்த சாபத்தினாலேயே பிற்காலத்தில் சூரபத்மனால் பிரம்மாதி தேவர்கள் யாவரும் நலிவுற்று வருந்தினர் என்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறிலா நந்தி சாப
உரைகள் நல்கி செல்லவே
மாறிலா ததீசி மாமுனி
மன்னன் தக்கன் முன்றலில்
ஏறுலாவும் ஈசனை
இகழ்ந்து வேள்வி செய்யற்க
கூறுவேன் சிற்சிலவென
கூறுவான் பல கதைகளே.

## பரமனின் லீலைகள்



தங்கு கருமத்தால் முக்தியென்ற
தாருகா வனத்து முனி விடுத்த
வேங்கை தன்னை உடுத்தனர்
வீரன் முயலகனை மிதித்தனன்
ஏங்குமாறு வந்த யானை
எதிர் செய்து உரி போர்த்தனன்
பாங்கிலே வரு பாம்பை
பெரு மலையாக சாத்தினன்.

## அடி முடி தேடினர்

செங்கண் மாலும் செம்மலரோனும்
சண்டை செய்து சோதியின்
பங்கமில் அடியொடு முடி தனை
பார்ப்போம் யாமென தேடியே
எங்கு தேடியும் திரிந்து பின்
ஏங்கித் தளர்ந்து நின்றிட
இங்குற்றேன் என இலிங்கத்தில்
இருந்தனன் சிவப் பரமனே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகந்தை கொண்ட சலந்தரன்
அழிய ஆழி விட்டதும்
பகர்ந்திட அரிய முப்புரங்களும்
பேரழலினால் சுட்டதும்
உகந்து சுடலைச் சாம்பலை
உடலின் மீது பூசியே
மிகுந்து வந்த நஞ்சுண்டு
மிடற்றில் தாங்கி கொண்டதும்

அந்தகனை உதைத்ததும்
அயன் தலை எடுத்ததும்
சந்திரனை தலையினில்
சாற்றியே காத்ததும்
விந்தை நரசிங்க வீரம்
விழுங்கி சரபமானதும்
எந்தை லீலை கோடியாம்
எம்மால் சொல்ல இயலுமோ.

## பிள்ளையார் பெருமை



குன்று போலும் உரத்தினன்
குணத்தில் மிகக் கெட்டவன்
அன்று வாழ் கஜமுகன்
அநியாயம் செய்து வாழ்ந்தனன்
என்றும் இளைத்து தேவர்கள்
எம்மானிடம் முறையிட
வன்றிரு பிரணவத்தினின்று
விநாயகனை வரச்செய்தனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தி மாமுக தயாளன் கணேசன்
தந்தி முக தரமிலாச் சூரனோடு
புந்தி மகிழ்ந்திட பெரும் போராற்றி
புவியோர் மகிழ்ந்திட மூஷிகமாக்கி
சிந்தை களிக்க சித்தி புத்தியரோடு
சீருடை ஐங்கரமது கொண்டு
வந்த தடையெல்லாம் நீக்கியேயதனில்
வருவான் நம்மை காத்திடுவானே.

## பைரவப் பெருமான்



அயனுடை அகந்தை நீக்கி
அடியவர் துன்பம் போக்கி
தயவுடன் காத்து நிற்க
தகவுறு சூலம் பூண்ட
வயிரவன் தன்னை தந்தான்
வளர் காசியதனில் நின்று
பயமெல்லாம் நீக்கும் மூர்த்தி அவன்
பாதமே நம்மைக் காக்கும்.

அல்லா என்பார்கள்
ஆதி பிதா என்பார்கள்
எல்லா அண்டமெலாம்
படைத்தளித்து துடைக்கும்
வல்லான் என்பார்கள்
வளர் சிவன் என்பார்கள்
அல்லல் அகற்றுமவனை
ஆர் அறிய வல்லார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பல வாசகம்
　　எம்மான் ததீசி சொலவும்
பொன்று காலமுற்றதால்
　　புத்தி ஒன்று நினைக்கிலன்
ஒன்று மட்டும் உரைப்பேன்
　　ஒரு போதும் சிவனை மதியேன்
என்று தக்கன் சொல்ல
　　முனி பெரிய சாபமிட்டான்.

*பொன்று காலம் - இறக்கும் காலம்*

முக்கண்ணன் மனைவி தந்தை
　　முயலும் மகம் காண வந்தாள்
நக்கலோடு நகைத்து பழிக்கவே
　　நாரி கேட்டு நடுங்கினாள்
மிக்க சினத்துடன் தீ மிகுகுண்டம்
　　விழுந்தனள்: கைலை சேர்ந்தனள்:
தக்கனின் வேள்வி அழித்திடவே
　　தயவுடன் அவளும் வேண்டினாள்.

*மகம்: வேள்வி, யாகம்*

*நாரி - பெண், தீ மிகு குண்டம் - அக்னி குண்டம்*

## வீரபத்திரர் தோற்றம்

ஆத்திரம் கொண்டனன்
　　அரனவன் ஆடினன்
சீற்றமது கொண்டவன்
　　சீர் விழி திறந்தனன்
கூற்றுவன் அஞ்சுமாறு
　　கோலமாய் வீரபத்திரன்
ஆற்றலின் வடிவு காளி
　　அவளுடன் அங்கு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனின் காலனான
கடவுளின் மைந்தன்
சீலமில் தக்கன் செய்யும்
சிறுதொழில் சாலை ஏகி
மூலமாம் முதல்வனாரின்
முதல் அவி பாகம் கேட்க
சூலபாணிக்கு இங்கில்லை
சிறுமதிப்புமென்றான் தக்கன்

எழுந்தனன் வீரபத்திரன்
எங்குள்ளீர் தேவரென்று
தளர்ந்திடும் அமரரை
தாக்கியே உயிரையுண்டு
விழுந்திடும் தக்கன் சிரம்
வாளினால் வெட்டியங்கு
கொழுந்து விடும் தீயாம்
குண்டத்தில் இட்டானே.



வீறு கொள் காளியோடு
வீரனும் இவ்வாறாக
மாறு கொள் மகத்தை
மண்ணிடை அகற்றி
ஊறு கொள் உம்பரை
உரப்பியே உயிரை வாங்கி
ஏறு மேல் ஏறும் தேவன்
எழில் மகவு நானென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தமே நடந்த யாகம்
யுக பிரளயம் போலாக
அத்தனும் அம்மையும் அங்கே
அரியதாம் காட்சி நல்கி
வித்தக வீரனை வாழ்த்தி
விரிந்த உடல்கள் நோக்க
நித்திரை விட்டு எழுவாராக
எழுந்தனர் யாவருமே.

## திருந்தினான் தக்கன்

ஆசறு வீரபத்திரன் தக்கன் உடலோடு
ஆடு மாத் தலை பொருத்தி
நேசமுடன் எழுகவென்ன எழுந்தனன்
நடுங்கி நாணிப் போற்ற
வீசு புகழ் உனக்குண்டு: பயத்தை
விலக்கியே வாழ்க என்று
ஆசியே அளித்தான் உமையொரு பாகம்
அமைந்த ஆதி மூர்த்தியே.

காசியில் வந்த தக்கன்
கவினுறு லிங்கம் செய்து
பூசனை மிகப் புரிந்தான்
புவி வருடம் ஆயிரமாகும்
ஈசனும் மிக மகிழ்ந்தான்
இணையிலாச் சிறப்புடைய
பேசு பூத சேனாபதியாகும்
புகழுடை பதவி தந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூஜை

குரு இவற்றைச் சொல்ல
குற்றமில் சயந்தன் கேட்டு
திரு மிகும் சிவபூசையை
தினமுமே செய்து வந்தான்
கருணையே வடிவமாகும்
கடவுள் வேளூர் மேவும்
அருளுடை வைத்தீசன்
அள்ளியே அருளை தந்தான்.

## கந்த விரத மேன்மை

வெள்ளியாம் வாரம் தன்னில்
விளங்கு கார்த்திகை விண்மீன்
வள்ளமை மிகுந்த நாளில்
வருமருள் ஐப்பசித் திங்கள்
உள்ளத்தே உவகையூட்டும்
உயர் கந்தசஷ்டி யென்னும்
கள்ளமில் விரதம் நோற்றரசர்
கந்தனின் அருளைப் பெற்றார்.

*வசிஷ்டரின் அறிவுரைப்படி முசுகுந்தன் எனும் ராஜா இந்த மூன்று முருகனின் விரதங்களையும் அனுசரித்ததாக விரிவாக புராணம் பேசுகிறது.*

## வள்ளி திருமணம்

தந்தையார் சொல காடு ஏகி
தகவுடைய மனைவியை தானிழந்து
சுந்தர அனுமனின் உறவு பூண்டு
சுக்கிரீவன் துணையோடு ஈழம் சென்று
விந்தைமிகு காமுகன் இராவணனை
வீழ்த்தியே சீதையை மீட்டு வந்த
சிந்தை மகிழ் சீர்பட்டாபிடேகமுற்ற
சீராமன் வில்லில் சிறந்தோனன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வில்லிலே சிறந்த கீர்த்தி
விநோதனாம் சீதாமணாளன்
நல்லரும் கதையே போல
நாயகன் முருகன் தானும்
வல்ல வேல் தனை விட்டு
வள்ளியை மணக்க வேடர்
வில்லினை தாங்கி நின்ற
வியன் கதை பேசுவோமே.

தண்டமிழ் பேசும் பூமி
தகவுறு தமிழின் நாடு
எண்டிசை இயற்கை கொஞ்சும்
எழிலுறும் குறிஞ்சி தன்னில்
கண்டவர் கருத்தை ஈர்க்கும்
கவின் மானின் மகளாய்
பெண் திருமகள் பிறந்தாள்
பெருவேடர் அதனை கண்டார்.

குன்றவர் வள்ளியின் மூலமெடுத்த
குழி தன்னிலுதித்த நற்குழவி
நன்றி பெறும் நம்பிராசனார்
நன்கு கண்டு வளர்த்து
வன்றிறல் கொண்டு வள்ளியென
வடிவின் நாமம் தந்தார்
நன்று கொண்ட பேரழகினளாக
நங்கை வளர்ந்து சிறந்தாள்.

*வள்ளி மூலம் - வள்ளிக் கிழங்கு*

*நம்பிராசன் - வேடுவர் தலைவன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் செய்து தினைப் புனம்
காத்து நிற்கும் வள்ளியை
தேவ மாமுனி நாரதனவன்
தெரிந்து குகற்கு சொல்லவே
பூவையை மிக பார்க்க மோகம்
பரவ ஒரு திரு வேடனாய்
பாவம் நீக்கும் பரம சுந்தரன்
பகன்றனன் பல சொற்களே.

*பூவை - பூப் போன்றவளான வள்ளி*

வேடனாக வேங்கையாக
விருத்தனாக விநோதனாக
நாடியே குமரியாட வரு
நல்லதோர் யாத்திரீகனாக
கூடிய காதல் கொண்டு
குமரி வள்ளியாளை நாடி
தேடி வருவான்: தாகமென
தண்ணீர் மிக உண்பான்.

*குமரி - இளம்பெண், நீர்வீழ்ச்சி இரண்டு பொருள் தரும் சொல்.*

மேகத்தை அனைய கூந்தல்
மகாவல்லி தன்னை நோக்கி
தாகத்தை அவித்தாய் இன்னும்
தவிர்ந்தில தளர்ச்சியென்
மோகத்தை குறைப்பாய் என்று
முனி வடிவர் சொல்ல மிக
கோபத்தை உடையவள் வள்ளி
கொடும் பழிச் சொல் சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதக் காட்சிக்கும்
உபநிடதம் விரிக்கும்
போதக் காட்சிக்கும்
புவியில் வரு ஆகம
நீதிக் காட்சிக்கும்
நிகரிலா முருகன்
தீதில் குறமகள் வள்ளி
தமிழினில் மகிழ்வுற்றான்.

பங்கய முகங்கள் ஆறும்
பன்னிரு புயமும் கொண்டோன்
சங்கடம் தவிர்க்க வேண்ட
சார்புடை கணேசன் ஆங்கே
பங்கமில் ஓசை செய்து
பார் புகழ் கஜமாய் வரவே
மங்கையாள் பயந்து அந்த
முதியோனை அணைத்து விட்டாள்.

*கஜம் - யானை*

## முருக வடிவம்

வீறு கொண்ட வேல்
வச்சிரம் அங்குசம் வில்
மாறு இலாத கொடி
மணி மழுவொடு அம்பு
ஏறு பங்கயம் அபயம்
எழில் தண்டு வரதமாய்
ஆறிரண்டு கை அறுமுகன்
அருட் காட்சி தந்தான்.

*பங்கயம் - தாமரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேங்கையாக நின்ற வேலன்
வள்ளி மட்டும் அறியவே
தீங்கிலாத தெய்வ வடிவு
தெரிய காட்டி பின்னரும்
நீங்கிலாத வேட இளைஞனாய்
நிகரில் காட்சி தந்திட
பாங்கி இவர்கள் காதலை
பாங்காய் அறிந்து கொண்டனள்.

*பாங்கி - தோழி, சேடி - வள்ளியின் துணைவி, தாதி.*

மேனி வியர்ப்ப மார்பு விம்ம
வெளுத்திட வாய் புரியும்
ஏனல் காக்கா நின்ற நங்கை
ஏற்றம் சேடி கண்டனள்
ஊனமில் புணர்ச்சி இங்கு
உள்ளதென்று கருதியே
வானவரும் அறியொணாத
வேலனை சென்று கண்டனள்.

*ஏனல் - திணைப்புனம்*

கோல மிக்க வள்ளியை
கொடுத்தனள் பாணி பற்றியே
சாலவே அன்புடன் காக்க
சாற்றினாள் ஒரு வேண்டுதல்
சீலமாய சேடி நோக்கி
சிறந்த அன்பு கொண்டனை
ஞாலம் உள்ள அளவும்
மறக்கிலம் என்றான் வேலனே.

*பாணி கிரணம் - சாதாரணமாக பெண்ணை பெற்ற பெற்றோர் சபையில், அக்னி சாட்சியாக மணமக்களை ஒருவரை ஒருவர் கைப்பிடிக்க வைத்தலைக் கருதும்.*

*இது கந்தர்வ மணம் என்பதால் களவு மணமாகிய தமிழரின் பண்டை மரபை ஒட்டி தோழியே இதனை செய்வித்தாள்.*

*பாணி என்பது கை.*

*கிரணம் என்றால் பிடித்தல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்விலா வேடர் கோமான்
சூழவே வந்த வேடர்
மாரியாய் அம்பு வீசியே
மறித்தனர் மணவாளரை
சீரிய சேவலங்கே ஒலித்திட
செறிந்த வேடரெலாம்
யாரும் இறந்தனர் அந்த
தகவுறு குக்குட ஒலிக்கே.

நீதியோ இது என்று வந்த
நிர்மல நாரதன் சொல்ல
தீதிலா வள்ளி அழைக்க
திறமுயர் வேடர் எல்லாம்
பாதக உறக்கம் நீக்கியே
பயத்துடன் எழுந்து நின்று
வேத நாயகனாம் சண்முகன்
வடிவினை கண்டார்களே.

முடிவிலா முதல்வன் தன்னை
முதன் முறை கண்ட வேடர்
அடியிணை பரவி மிகவும்
அன்புடன் இவற்றை சொல்வார்
கொடியிடை கோதையாளை நம்
குடிலினில் வந்தே முறை
திடமுற மணக்க வேண்டும்
திரு முருகனும் உடன்பட்டானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவெனும் வதனம் நெற்றி
நெடு மழை அனைய கூந்தல்
மலரெனும் கண்கள் கைகள்
மகா வல்லி அழகின் தெய்வம்
அலகிலா இறைவன் உடனே
அற்புத மண விழா காண
சிலை கொள்ளும் வேடரெலாம்
சிறப்புடன் அதனை கண்டார்.

தன்னிகர் இல்லா தான
தமிழ் வள்ளி தன்னை
பொன்னிகர் ஒளி வேலோன்
புகழ்பெறு மனையாளாக்க
கன்னியாள் தானும் குகனை
கைப்பிடித்திருந்த வேளை
மன்னிடு தேவ வடிவு கொண்டு
மன மகிழ்ந்து இருந்தாளே.

அண்டர்கள் பணியவே
ஆறுமுகற்கே பெண்ணளித்த
வண்டமிழ் நம்பிராசற்கு
வரமது மிகவும் நல்கி
எண்டிசை போற்றிடவே
எழில் மங்கை உடன்சேர
மண்டிய பெருமை தணிகை
மாமலை சேர்ந்தான் முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதேச காண்டம்

## செம்பொருள் கொள்க

நம்பி ராசன் பெற்ற நங்கை
நற் குற மகளை நாடி
எம்பி ரான் காதல் கொண்டு
எழிலுற மணந்த காதையை
வம்பி லா ஆன்மாவை ஈசன்
எளிவந்து கருணையிலாளும்
செம் பொருள் கண்டு கொள்வர்
செகத்திலே அறிஞர் தாமே.

## இருவரும் ஒருவராவார்

அறிஞர் போல் தோன்றும் மூடர்
ஆயிரம் கேள்வி கேட்பார்
திருமாலின் விழி தரு மாதர்
திறத்தினில் பேதம் இல்லை
ஒருவரில் இருவரானார்: இருவரும்
ஒருவரே தான்: இறைவர்க்கு
குறவரும் தேவர் கோமானும்
ஒன்றெென்பதே உண்மையாமே.

*இவ்விரு தேவியரும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் இரு கண்களிலிருந்து தோன்றியவர்கள் என்கிறது புராணம்.*

*ஒரே அன்னையே இரு வடிவில் திகழ்கிறாள் எனவே கொள்ள வேண்டும். இதை உணர்த்தும் விதமாக நல்லூர் கந்தசுவாமி கோயிலில் ஒரு விக்கிரகம் அமைந்துள்ளமையும் சிந்திக்கத்தக்கதாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான சக்தியாம் தேவசேனா
ஞால இன்பங்கள் அருளும்
ஆன பேரிச்சா சக்தி எனும்
அழகுற வள்ளி இணைய
ஊனமில் கிரியா சக்தி ஆங்கே
உயர்வுடன் கலந்து நிற்க
மானவேலிறைவன் தோன்றி
முக்தி முதலாயதருள்வதியற்கை.

## ஆறெழுத்து

மங்களம் அருளும் சவ்வும்
மாவொளி கூட்டும் ரவும்
பொங்கு சாந்தியாம் வவும்
போர் வெற்றியாம் ணவும்
தங்கியே தோன்றியதை
சாற்றிடும் பவனும் சேரும்
பங்கமில் சடாட்சர பொருள்
பரவினால் கோடி பெறுமே.

*ச- மங்களம்*

*ர - ஒளி*

*வ - அமைதி*

*ண- போர்*

*பவன் - தோன்றியவன்*

*ஓம் - பரமான்மா உருவம், ஐம் - வாக்குச் சித்தி, கிலீம் - லோக வசியம், ஸெளம் - தேகம் பலம், ஸ்ரீம் - பெருஞ்செல்வம், ஹ்ரீம் - நிலவளம், சரம், நாரம் - நீர், வநம் - வசிக்குமிடம், நாராயண - சரவண, பவ - சிவ (நமசிவாயத்தை கருதும்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தானம் பெருகிற்று

தந்தை முருகன் தாயார் வள்ளி
தங்கிடும் அழகு சேனா
சிந்தை நிறைய இல்லறம் பேணி
சிறப்புற வாழ்ந்திடவே
நந்தமிழ் பொழிவாய் நல்லறச் சிறப்பாய்
நற்றிருக் குழந்தையர்
சுந்தர உருவில் தோன்றினரே
சிவக் குடும்பம் வளர்ச்சி பெற்றதே.

உன்னத வாழ்வில் மன்னவன் முருகன்
உலகம் மகிழ்வுறவே
தன்னுடை துணைவியர் பரதவர் தம்
தகவுடை மகளென
நன்னிலத்தே போற்று தேவசேனா
நாயகியுடன் குறவர்
தன்னுடை மகளுடன் குழவியரோடு
தகவுற வீற்றிருந்தான்.

*பரதர் - மீனவர்*

*குறிப்பு: தேவசேனா மீனவர் குலமகள் என்று தென்தமிழகத்தில் போற்றப்படுகிறாள்.*

## உத்தம சரிதை

தத்துவ ஞான சித்தாந்த சைவம்
தகவுற வளர்ந்ததே!
சத்திய வேத ஆகம சாஸ்திரம்
தரணியில் உயர்ந்ததே!
எத்தனை உண்மை தெரிந்ததிங்கு
இறை குமார காவியத்தில்
உத்தம சரித்திரம் உயர்ந்து விரிந்தது
உலகோர் மனங்களிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானில் இருந்து வந்த இறைவன்
வளர் கந்த வெற்பில்
தானே சிவமாம் தகைமை காட்டி
தகவுறு பரமேசுவரம்
சிந்தையில் சிந்தித்து உணரலாத
சீருடை வடிவுற்றே
நந்தமிழ்ச் சைவர் மனமெலாம் நின்று
நல்லருள் சொரியலானான்

## இடும்பனுக்கு அருளியது

பற்றும் பாசம் மிகக் கொண்டு பதறும் வாழ்வு இதுவென்ற
முற்றும் அறிவு மிகப் பெற்ற முறைசேர் இடும்ப அசுரனவன்
குற்றமில்லா கும்ப முனி சொல கோதிலா இமய மலைச் சாரல்
உற்ற இருகிரி காவடி உவப்பாய் எடுத்து வந்தனனே

*(கிரி- மலை, கும்பமுனி- அகஸ்தியர்)*

களவும் பொய்யும் அகற்றிய கவினார் மனத்து இடும்பனவன்
உளமே மகிழ்ந்து காவடியை உயர்த்தி ஆவினன்குடி வரவே
களைப்பு மிகுந்து காய் கனி உண்டு காவடி தூக்க முயன்றிட்டே
ஒளிரும் அவற்றிலொரு கிரியில் ஒரு சிறுவன் நிற்க கண்டனனே

மேலே இருக்கும் சிறியோனை மெதுவாய் இறங்கி ஓடென்றான்
வேலாயுதனோ மறுதிடவே மேம்படு போர் அங்கே செய்திட்டான்
காலனிடத்தே சென்றிட்டான்: காதலி குகனை வருந்தி வேண்ட
சீலார் உயிர் வரப் பெற்றான்: சிறப்பினால் பழனி காக்கின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய்க் குற்றம் களைவான்

கூறுடையாளும் குன்றாக் குணப் பெரும் குன்றும் ஞான
பேறுடைப் பழம் நீயென்று பேரது கொண்டே போற்றும்
ஆறுமாமுகத்து ஐயன் அழகுறு ஆண்டிக் கோலம்
வீறுடை பழனி போற்றின் விரி குற்றம் விலகுமன்றோ

## நாக நாயகன்

தீதிலாச் செய்கை கொண்ட திறமிகு சே'னாதி
பாதாள உலகம் வாழும் பாம்பினம் கலங்கச்செய்த
பாதகப் பிரலம்பனை அழித்து பண்புடனருள் செய்த
நாதனை நாளும் போற்றின் நாகதோடம் நீங்குமன்றோ

*நாகதோடம் - நாகதோஷம்*

## ஔவைக்கு அருளினான்

ஊனுடலம் தள்ளாட உலகிலே தமிழ்ப்பாட்டி வாடி
வானுயரு மரநின்ற வள்ளல் சிறுவனை நோக்கியொரு
தேனுடை பழம் தாவென்ன திறமுற சுட்டதா சுடாததாவென
ஈனஅகந்தை அகற்றி இனிய தமிழ்பெற்றே அருளினனே

## மெய்க்காவலர்

அஞ்சலித்த கைகளோடு ஆறு திருமுகத்தினோடு
விஞ்சுபுகழ் வச்சிரத்தோடு விளங்கு பதுமத்தோடு
கொஞ்சுமெழில் கரத்து கோல நல்லுருவம் கொண்ட
துஞ்சுதலில்லா எண்மர் தூயவன் மெய்க்காவலாவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(சண்முகர், சக்திபாணி, கார்த்திகேயர், குஹர், ஸ்கந்தர், மயூரவாகனர், சேனாதி, சக்திஹஸ்தர் என்கிற எட்டு தேவர்களான இவர்கள் இறைவனை நோக்கி நான்கு திருக்கரங்களோடு எழுந்தருளி மெய்க்காவர் செய்வர். அஞ்சலித்த முன்னிரு கரங்களோடும் பின்னிரு கரங்களில் தாமரை, வச்சிராயுதம் என்பவற்றை கொண்டும் இவர்கள் விளங்குவர் என்கிறது உத்தரகாமிகாகமம்)*

## நரக வாசிகள்

அந்தணரை வருத்துவோர்
அரன் சொத்தை அபகரிப்போர்
வந்த விருந்தை ஏசியோர்
வறியோரை வாட்டியோர்
அந்தமில் நரகு சேர்வரென
அன்று முனிவர் புகன்றார்
சிந்தையிலே சிவனை சிந்திப்போர்
சீரார் வாழ்வு பெறுவர் என்றார்.

*அரன் சொத்து - சிவன் சொத்து.*
*(சிவன் சொத்து குலநாசம் என்பது முதுமொழி)*

## வாகனமான அசுரர்கள்

முன்னாள் செய்த மாதவத்து முயற்சிப்பயனாய் சூரராதி
வன்மை மிகுந்த நாலசுரரர் வளமை வாகன வடிவமுற்று
குன்றுடை விளக்கம் போல குகன் ஐயன் கொற்றவையை
நன்றென தாங்கி நின்றார் நற்றமிழ் போல வாழ்ந்தார்

*(சூரன், பதுமன், சிங்கன், தாரகன் ஆகிய அசுரர்கள் முன் செய்த தவப்பயனாய் முறையே முருகவேள், ஐயனார், துர்க்கைக்கு மயில் வாகனமாகவும் கோழிக்கொடியாகவும், யானை வாகனமாகவும், சிங்கவாகனமாகவும் மாறி இறவா வரம் பெற்று வாழ்ந்தனர் என்று கந்தபுராண உபதேச காண்டம் குறிப்பிடும்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமே செய்தாரேனும் குணத்திலே குறைந்தோரேனும்
மற்றவர் இகழுமாறு மயங்கியே வாழ்வாரேனும் மனம்
சற்றெனும் மாறியாங்கே சத்திய முருகைச் சேர்ந்தால்
உற்ற பரமுக்தியும் பெறுவர்: உன்னத உயர்வு காண்பார்:

தலையாய தந்தை தாயின் தவச் சொல்லை ஏற்று வாழ்ந்து
கொலை கொள்ளை விபச்சாரம் குடியெனும் குற்றம் நீக்கி
மலையெனும் பொய்யகற்றின் முடிவிலா முக்தியாம் இன்ப
நிலையது தருவோமென்றே நிர்மலன் சொல்வான் போலும்

ஊனமுற்றோர்க்கு நாளும் உதவிடல் வேண்டும் அங்கே
தானமே வேண்டும் ஏழைக்கு தயவொடு தருதல் வேண்டும்
ஞானமே கொண்ட மறையோரை நாளுமே போற்ற வேண்டும்
வானமே இறங்கி வந்து வாழ்த்தும் என சொல்வான் போலும்

உள்ளவர் இவருக்குள்ளே உயர்வு தாழ்வு இல்லையென்ற
தெள்ளிய சேதி சொல்ல தேவசேனாவொடு குறமின் கொண்ட
வள்ளலார் அசுரருக்கும் வாழ்வு வழங்கிய காதைச் செம்பொருள்
உள்ளத்தே கொண்டார் வாழ்வு உயரும்: உம்பரும் போற்றுவாரே:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை விரதம்

ஆறுமாமுகன் அருந்திட முலையமுது அளித்தோர்
நாறுபூங்குழல் கார்த்திகை காரியர் அவரை போற்றி
நீறு சாத்திய நிர்மலர் பதினாறு வடிவம் நினைந்து
மாறிலா உளத்தோடு துதிக்க முக்தியும் பெறலாமே

*(பதினாறு வடிவம்- சக்திதரர், ஸ்கந்தர், சேனாபதி, சுப்பிரமணியர், கஜவாகனர், சரவணபவர், கார்த்திகேயர், குமாரர், சண்முகர், தாரகாரி, சேனானி, பிரம்மசாஸ்தா, வல்லீகல்யாணசுந்தரர், பாலஸ்வாமீ, கிரௌஞ்சபேதனர், சிகிவாகனர்- குமாரதந்த்ராகமப்படி இந்த திருவுருவங்களையும் கார்த்திகை மாதரையும் கார்த்திகை நட்சத்திரநாளில் பூசித்து வழிபாடு செய்யுமாறு புராணம் வழிப்படுத்துகின்றது.)*

## முருகனின் குமாரர்கள்

சீலமாய் ஆறுதிசை சிறப்புற வகுத்தே
கோலமாய் அறு குமாரர் குகனைச் சூழ
சாலவே திசை தொறும் போற்றுமாறு
ஞாலத்தே மயூரபுராணம் நவிலுமன்றே



*(கந்தசட்டிக்காலத்தே முருகப்பெருமானின் ஆறு திருக்குமாரர்களையும் பெருமானின் ஆறு திசையிலும் வைத்து பூசிக்குமாறு மயூரகிரிப்புராணம் நவில்கிறது.)*

*முருகவடிவு பூண்ட இவர்கள் சுப்பிரமணியர், குமாரர், ஹரசூனு, சுராக்கிரசர், சேனாபதி, சுரேசர் ஆகிய முருகப்பெயர் பூண்டவர்களாவர்.*

*இவர்களில் முதல்வர் ஒருதிருமுகமும் நான்கு திருக்கரங்களும் பொன்னிறமும் கொண்டவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இரண்டாமவர் ஒரு திருமுகமும் ஞானமுத்திரையும் புத்தகமும் தாங்கிய இரு கரமும் கொண்டவர்.*

*மூன்றாமவர் ஆறுமுகமும் பன்னிருகரமும் கொண்ட நீலநிறத்திருமேனி உடையவர்.*

*நான்காமவர் ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டவராக சந்திரகாவி வஸ்திரத்தை தரித்தவர்.*

*ஐந்தாமவர் ஆறுமுகமும் பன்னிரு கரமும் கொண்ட பால் போன்ற மேனி உடையவர்.*

*ஆறாமவர் ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டவர்*

## ஆறுபடை வீட்டழகன்
## ஆனை மீதும் வருவான்

வாரணம் மீதும் வருவான்:

வற்றாத கருணை செய்வான்:

ஏரகன்: பரங்கிரி பழனி

எழில் செந்தில் சோலைமலையன்:

சீரகன்: குன்று தோறாடும்

சிந்தையன்: உயிர்கட்கெல்லாம்

காரணன்: எங்குமான

கடவுள் குமரன் தானே

*வாரணம் - யானை*

*(முருகனின் பிரதான வாகனங்களில் யானை குறிப்பிடத்தக்கது. சுவாமி மலை, திருப்பரங்குன்றம் போன்ற பல ஸ்தலங்களில் மயிலுக்கு பதிலாக த்வஜஸ்தம்பத்தின் அருகில் ஐராவதமாகிய யானையே அமைக்கப்பெற்றுள்ளது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கோடி செய்திகளோ இந்த இறைவன் புராணத்திலே
அத்தனையில் சில துளிகளைப் பருகி ஆனந்தம் மிகவுற்றோம்
உத்தம சரிதை உள்ளபடி உணர கச்சியப்பர் நூல் கற்றிடுவீர்
தத்துவம் ஏதும் விட்டு விட்டிருப்பினும் தயவுடன் பொறுத்தருள்வீர்

*(இங்கு இறைவன் புராணம், கச்சியப்பர் நூல் என்றெல்லாம் குறிப்பிடப்படுவது கச்சியப்ப சிவாச்சார்யர் அருளிய கந்தபுராணம் ஏற்றுப் போற்றுவீர்*

பண்டோர் காலம் நடந்த புராணம் பாங்குடன் பருகி இதை
கண்டோர் யாவரும் கசிந்து உருகி காதலுடன் படித்து
உண்டே உவந்து பிறர்க்கும் அளித்து உயர் அறத்தில் ஒழுகி
வண்டார் குழல் வள்ளி மணாளனை வாழ்த்தி வாழ்வீரே.

## அடைக்கலம்

நின்னருளாம் கதியின்றி மற்றொன்றில்லை
நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன்
உன்னருளுக்கு இனிதாய நிலையுகந்தேன்
உன்னடியே அடைக்கலமாம் உயர்வு பெற்றேன்
மன்னிடு பரங்கிரி செந்தி மாநகர் மாபழநியேரகம்
மகிழ்வுறு ஆடல் சோலையெனப் பலதலமுறை
இன்னருளே தண் தமிழாய இறைவன் நீயே
என் முருகா! அடைக்கலம் கொள் என்னை நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

சந்ததம் முருகு வாழி! சரண பங்கஜங்கள் வாழி!
இந்திரன் புதல்வி வாழி! எயினர் தம்குமரி வாழி!
சுந்தரன் அடியர் வாழி! சனாதன தர்மம் வாழி!
பைந்தமிழ் என்றும் வாழி! பாரெல்லாம் வாழி! வாழி!

வாழிய வள்ளி வாழிய சேனா வாழிய சண்முகப்பிரான்!
வாழிய வேல் வாழிய சேவல் வாழிய உலகமெலாம்!
ஏழைகள் பாவிகள் இரட்சகனாக எங்கும் நிறைந்த பிரான்
ஊழ் வினை அகற்றும் உயரிய காதை உரைப்போர் உயர்ந்து வாழி.

## நூற்பயன்

புத்தகத்தை முருகன் வடிவாகப் பூசித்து
புகழும் கந்த புராணத்தை படிப்போர்
வித்தக ஞானம் வீரம் வியன் செல்வம்
விரும்பிய பேறுகள் யாவும் பெறுவர்
அத்தனின் அருளுடன் முக்தியுமுறுவரென பெருகுமென
ஆன்றோர் நவின்றனர்: சிவயோக
உத்தம முனிவரும் உறுதியாய் உரைத்தார்
உண்மையிதுவென்பர் அனுபவமிக்கார்.

## வாழ்த்து

அரசர் செங்கோல் வாழ்க! அந்தணர் அறமே வாழ்க!
பெருநில வளங்கள் வாழ்க! பருவத்தே மழையும் பெய்க!
மருவு மாதர் கற்பு வாழ்க! மாநிலத்தவர் மகிழ்ச்சி வாழ்க!
இரவியாம் சனாதன தர்மம் ஈடிணையின்றி பரவி வாழ்க!

*சுபம்*

**மொத்த விருத்தம் – 172**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘குமார காவியம்’ (2017) நூலாசிரியர் எழுதிய பிற சில நூல்கள்

1. மகத்துவம் மிக்க மகாவிஷ்ணு வழிபாடு (வைணவமார்க்கஅறிமுகநூல்) – 2009
2. எவ்வழி நல்வழி? (பல் சமய உறவாடல் நூல்) –2009
3. நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ் –2010
4. கருணை நிறை காமாட்சி– 2011
5. இலண்டன் திருமுருகன் இன்தமிழ்ப்பாமாலை– 2011
6. அபிராமியின் காதலன் (குறுநாவல்)– 2012
7. ஸ்தோத்திர மணி மாலா (சம்ஸ்கிருத புதுக்கவிதைகள்) –2013
8. ஏற்றம் பெருக வந்தாய் (கவிதைத்தொகுப்பு)– 2013
9. ஈழத்து வேதியர்களிடம் வழங்கும் மொழி வழக்காறுகள்– 2015
10. கல்யாண வைபோகம்– 2015
11. வேதமும் நாமும்– 2016

- நீர்வைக்கதிர்வேல் (செல்லக்கதிர்காம சுவாமி ஆலய கும்பாபிடேக மலர்) 2012
- கல்யாண வசந்தம் (பொன்.செல்வ மஹால் திருமண மண்டப திறப்புவிழா மலர்)– தொகுப்பாசிரியர்– 2013
- ஆசிரியர் – சனாதனி ஆன்மீகச்சஞ்சிகை
- துணை ஆசிரியர்– இந்துசாதனம்

### உலகத் தெய்வம்

முருகன் தமிழ்க் கடவுள் என போற்றப் பெறின் உலகெலாம் போற்றும் ஒரு பெருந்தெய்வம் ஆவான். அவனை கார்த்திக், கதிரகமதெய்யோ, நாகசுப்ரம்மண்யன், குமாரன், ஸ்கந்தன் என்று பாரததேசமெங்கும் போற்றுவர்.

ஆயினும் உலகமெங்கும் வெவ்வேறு பெயர்களில் அவன் வழிபடப்படுகிறான். யூதர் சின்னமான அறுகோணம் கூட முருக சின்னம் போலவே திகழ்வது கூட அவதானிப்பிற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org